**Central Organisation of**
**Tamil Nadu Electricity Employees**
(Regd. No. 158 / CPT, - Recognised by TNEB - Affiliated : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, MOSQUE STREET,
C H E P A U K ,
CHENNAI - 600 005.
Phone : 2 8 5 4 8 5 2 9
2 8 5 1 5 0 3 8
Fax : 2 8 5 1 6 5 7 4

President **S.S.SUBRAMANIAN** | General Secretary **S. RAJENDRAN** | Treasurer **M. VENKATESAN**

நாள்: **17.12.2016**

**பெறுநர்**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

ஐயா

**பொருள் : நிர்வாகம் - மின்சாரம் - "வார்தா புயல்" - மின் கம்பங்கள், மின்மாற்றிகள் - சேதம் - போர்கால அடிப்படையில் செய்ய வேண்டிய பணிகள் - ஒப்பந்த ஊழியர்களை ஈடுபடுத்தக் கோருவது - தொடர்பாக**

கடந்த 12.12.2016 அன்று சென்னை,திருவள்ளூர், காஞ்சிபும், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களை **"வர்தா புயல்"** தாக்கியது. இதன் விளைவு சுமார் 30,000-க்கும் மேற்பட்ட மின் கம்பங்களும் 1000-க்கும் மேற்பட்ட மின்மாற்றிகளும், நூற்றுக்கணக்கான பில்லர் பாக்ஸ், மற்றும் புதைவட கேபிள்களும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. இவற்றை நிவர்த்தி செய்ய சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் நமது களப்பிரிவு ஊழியர்களை கொண்டு பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அந்த புயலால் ஏற்பட்ட இழப்போ! பேரிழப்பு அவற்றை சரிசெய்து மின் விநியோகம் செய்வதற்கு வாரியம் எடுத்த நடவடிக்கை போதுமானது அல்ல என்பதை உணர்ந்து இயக்குநர்/ விநியோகம் அவர்களை சந்தித்து, பழுதை சரி செய்ய நீங்கள் உத்தேசித்துள்ள மனித சக்தி போதுமானது அல்ல! என்பதை உணர்த்தினோம், தானே புயலின் அனுபவத்தை கணக்கில் கொண்டு 1 பிரிவிற்கு 50 ஊழியர்கள் என்ற முறையில் பாதிக்கப்பட்ட 300 பிரிவு அலுவலகங்களுக்கு 15000 ஊழியர்களை பணியில் அமர்த்த வேண்டும் என்றும் தேவையான தளவாட சாமான்களை தடையின்றி வழங்கிட வேண்டும் என்றும், வேறு வட்டத்திலிருந்து வந்து பணியாற்றும் ஊழியர்களுக்கு தங்குமிட வசதி, உணவு, மருத்துவம், நடமாடும் கழிப்பறை போன்றவைகளை செய்து தர வேண்டும் என்ற கருத்தையும் பதிவு செய்தோம்.

இயக்குநர் / விநியோகம் அவர்களிடம் பேசியதின் அடிப்படையில், பழுதுகளை சரிசெய்ய போதுமான மனித சக்தி இல்லை என்பது உணர்ந்து மின் விநியோக வட்டத்திலிருந்து 600 ஊழியர்களும் அண்டை மாநிலமான ஆந்திராவில் 2000 ஊழியர்களையும் பணியில் ஈடுபட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிகிறோம்.

புயலின் தாக்கம், தேசமடைந்த மின்கம்பம், மின் மாற்றிகள் என கணக்கீட்டு பார்த்தால், தமிழக அரசும், வாரியமும் அறிவித்ததை விட அதிகமாக இருக்கும் என்பதை உணர முடிகிறது.

மேலும் தற்போது 4 நாட்கள் ஆகியும் மின் விநியோகம் சீராகாத நிலையில் பல இடங்களில் பொது மக்கள் சாலைமறியல் உள்பட போராட்டம் நடத்தி வருவதாக பத்திரிக்கை செய்திகள் வந்துள்ளன.

தமிழகத்தில் விநியோகப் பிரிவில் பல்லாயிரக்கணக்கான ஒப்பந்த ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள் என்பது தாங்கள் அறிந்ததே! புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் இந்த பணிகளை செய்ய வேண்டுமெனில், களப்பிரிவில் நன்கு அனுபவம் வாய்ந்த ஒப்பந்த தொழிலாளர்கள் தேவை என்பதை வாரியம் உணர்ந்து இந்த ஒப்பந்த ஊழியர்களை பணியில் ஈடுபடுத்தினால் விரைவில் மின் விநியோகம் செய்யலாம் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

எனவே, தமிழக மக்களின் நலனை கருத்திற்கொண்டும், சட்டம்,ஒழுங்கு பிரச்சனையை கருத்திற்கொண்டும், நமது ஒப்பந்த ஊழியர்களை, புயல் நிவாரண பணிகளில் பயன்படுத்த ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!

தங்களின் உண்மையுள்ள

**( S. இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

நகல் :

(1) இயக்குநர் - விநியோகம்/தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோக கழகம்
(2) இயக்குநர் - உற்பத்தி/தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோக கழகம்
(3) இயக்குநர் - மின்தொடரமைப்பு/தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்
(4) தலைமைப் பொறியாளர்/ பணியமைப்பு/தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோக கழகம்

Central Organisation of
Tamil Nadu Electricity Employees
(Regd. No. 158 / CPT, - Recognised by TNEB - Affiliated : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, MOSQUE STREET,
C H E P A U K ,
CHENNAI - 600 005.
Phone : 2 8 5 4 8 5 2 9
2 8 5 1 5 0 3 8
Fax : 2 8 5 1 6 5 7 4

President
S.S.SUBRAMANIAN

General Secretary
S. RAJENDRAN

Treasurer
M. VENKATESAN

நாள்: **17.12.2016**

**பெறுநர்**

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

ஐயா

**பொருள் : பணியமைப்பு - நிர்வாகம் தமிழக மின் வாரிய ஊழியர்களின் தேங்கிக்கிடக்கின்ற கோரிக்கைகளின் மீது வாரியத்தின் கவனத்தை தீர்வு காண வேண்டி கூட்டு முறையீடும் - காத்திருக்கும் இயக்கம் நடத்துவது- வாரியத்திற்கு தகவல் தெரிவிப்பது - சம்மந்தமாக**

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில மாநாடு ஆகஸ்ட் 13 முதல் 16 வரை நான்கு நாள் மாநாடாக நடைபெற்றது. அம்மாநாட்டில் மின்வாரிய ஊழியர்களின் நீண்டநாள் தீர்வு காணப்படாத கோரிக்கைகளின் மீது கவனத்தை ஈர்த்து தீர்வு காண்பதற்காக 4.10.2016 அன்று கூட்டுமுறையீடும் காத்திருக்கும் இயக்கமும் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

4.10.2016 கூட்டு முறையீடும் - காத்திருக்கும் இயக்கம் நடத்துவது சம்மந்தமாக அனைத்து பணிகளும் நடந்து கொண்டிருக்கையில் தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல் நடத்துவது சம்மந்தமாக அறிவிப்பு வெளிவந்ததனால் 4.10.2016 இயக்கத்தை 8.11.2016 அன்றைக்கு தள்ளி வைத்த தோடு, வாரியத்திற்கு போதிய அவகாசமும் கொடுக்கப்பட்டது. இதற்கிடையில் ஆயுத பூஜை மற்றும் தீபாவளி விடுமுறைகள் குறிக்கிட்டதால் 8.11.2016 என்ற தேதியையும் தள்ளிவைத்து வாரியத்திற்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டது.

நாங்கள் முன்வைத்த கீழ்கண்ட நியாயமான கோரிக்கைகளின் மீது எந்த வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் வேறு வழியின்றி மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில மாநாட்டில் எடுக்கப்பட்ட இயக்க முடிவை அமலாக்குவதை தவிர வேறு வழியில்லை என்ற நிலை வந்ததனால் கீழ்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கூட்டுமுறையீடும் காத்திருக்கும் இயக்கமும் 22.12.2016 அன்று நடத்திட உள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## கோரிக்கைகள்

1. மின்வாரிய ஊழியர்களுக்கு 1.12.2015 முதல் ஊதிய உயர்வு வழங்கியிருக்க வேண்டும், ஆனால் வாரியம் கமிட்டி அமைப்பதும், பேச்சு வார்த்தை துவங்குவது என்பன போன்றவற்றை செய்து காலதாமதம் செய்து வருகிறது. பேச்சு வார்த்தையை தொடர்ச்சியாக நடத்தி ஒப்பந்தம் கண்டு, ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும்

2. மின்வாரியத்தில் பணியாற்றும் வணிக உதவியாளர் - கம்பியாளர் ஊழியர்களுக்கு சமச்சீர் பதவி உயர்வு இல்லாத காரணத்தால் இரண்டாண்டு பணி முடித்த வணிக உதவியாளருக்கு பதவி உயர்வும், 13 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய கம்பியாளர்களுக்கு பதவி உயர்வு இல்லாத அவல நிலை நிலவி வருவதை மாற்றும் வகையில் வணிக உதவியாளர் - கம்பியாளருக்கு சமச்சீராக பதவி உயர்வு கிடைக்கும் வகையில் பேச்சு வார்த்தை நடத்தி இறுதி நிலை எட்டிய பிறகும், அதன் மீது தொடர்ச்சியான நடவடிக்கை எடுத்து கம்பியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும் வகையில் சூப்பர் நியூமரி மின்பாதை ஆய்வாளர் பதவிகளை காலதாமதமின்றி அனுமதித்திட வேண்டும்.

3. 10 ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பந்த தொழிலாளியாக பணியாற்றி, அதன் பின்னர் மஸ்தூராக பணி நியமனம் செய்யப்பட்டு,மஸ்தூராக 5 ஆண்டுகாலம் பணியாற்றி, அதன் பின்னர் கள உதவியாளராக பதவியில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அடுத்த பதவி உயர்வு வாய்ப்பு வரும்போது மஸ்தூர் பணிக்காலத்தை பதவி உயர்வுக்கு எடுக்க வேண்டாம் என்ற தவறான உத்தரவை பிறப்பித்து அந்த உத்திரவை ரத்து செய்து, 10 ஆண்டுகளுக்கும் மேலாக களம் அனுபவம் பெற்ற மஸ்தூர்களின் பணிக்காலத்தை முதன்மை பட்டியலுக்கு கணக்கில் கொண்டு, பதவி உயர்வு வழங்கிட வேண்டும். அது மட்டுமல்லாமல் களப்பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற நீதிமன்ற தற்காலிக தடையை அகற்றி பதவி உயர்வு உடனடியாக வழங்கிட வேண்டும்.

4. மின்வாரியத்தில் 20,000-க்கும் மேற்பட்ட களஉதவியாளர் பதவிகள் காலியாக உள்ளதை மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளிகளை அடையாளங்கண்டு, சமவேலைக்கு சமஊதியம் அளித்து, பின்னர் பணி நிரந்தரம் செய்து காலிப்பணி இடங்களை நிரப்பிட வேண்டும். அதன்பின் வாரியத்தில் காலிப்பணி இடங்களாக உள்ள களஉதவியாளர் பதவிகளை தொழிற்கல்வி பயின்றவர்களைக் கொண்டு (ஐ.டி.ஐ) நிரப்பிட வாரியம் எடுத்த முயற்சியில் அப்பரண்டீஸ்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதையும் கணக்கில் கொண்டு நீதிமன்ற தீர்ப்பை முடிவுக்கு கொண்டு வந்து, தொழிற்கல்வி ஐ.டி.ஐ பயின்றவர்களைக் கொண்டு களஉதவியாளர் பதவிகளை நிரப்பிட வேண்டும்.

5. மின் வாரியத்தில் புதியதாக துவங்கப்பட்ட அலுவலகங்களுக்கு பகுதிநேர ஊழியர் பதவிகளை அனுமதித்து நிரப்பிட வேண்டும் என்ற மத்திய அமைப்பின் வேண்டுகோளின் படி திட்டங்களில் கருத்துருக்களைப் பெற்று 1046 பதவிகள் அனுமதிக்க வேண்டும் என்ற நிலை வந்த பின்னரும், வீணாக காலதாமதம் செய்யும் வகையில், விவரங்கள் கேட்பதை கைவிட்டு இறுதிப்படுத்தப்பட்ட 1046 பதவிகளை அனுமதித்து உடன் நிரப்பிட வேண்டும்.

6. மின் வாரியத்தின் வருவாயை உறுதிப்படுத்தும் கணக்கீட்டுப் பிரிவில் 2500-க்கும் மேற்பட்ட கணக்கீட்டு ஆய்வாளர் பதவிகளும் 1000-க்கும் மேற்பட்ட வருவாய் மேற்பார்வையாளர் பதவிகளை நிரப்பிடும் வகையில் வருவாய் மேற்பார்வையாளர் பதவி உயர்வுக்கும்,

மதிப்பீட்டு ஆய்வாளர் பதவி உயர்வுக்கும் நிர்ணயிக்கப்பட்ட பணி அனுபவ காலத்திற்கு விதிவிலக்கு அளித்து பதவி உயர்வு அளித்து மேற்கூறிய பதவிகளை நிரப்பிட வேண்டும்.

7. பதிவறை எழுத்தர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கும் வகையில் பதிவறை உதவியாளர் பதவிகளை அனுமதித்து, அதற்கான பெயர் பட்டியல் கேட்டு பெறப்பட்ட பின்னரும் காலதாமதம் செய்யும் போக்கினை கைவிட்டு 47 பதிவறை உதவியாளர் பதவி உயர்வை உடனடியாக வழங்கிட வேண்டும்.

8. 500-க்கும் மேற்பட்ட உதவிசெயற்பொறியாளர் பதவிகள் பலமாதங்களாக காலிப்பணி இடங்களாக இருந்த போதிலும், அப்பதவிகளுக்கு தேவையான பொறிஞர்கள் பதவி உயர்வுக்கு காத்திருந்த போதிலும், பதவி உயர்வு அளித்து பதவிகளை நிரப்ப வீணான காலதாமதப் போக்கினை கைவிட்டு காலியாக உள்ள உதவி செயற்பொறியாளர் பதவிளை உடனடியாக நிரப்பிட வேண்டும்.

9. 80,000-க்கும் மேற்பட்ட பணி நிலைமைகளை பரிசீலித்து வழிகாட்டுதல் வழங்க வேண்டிய நிர்வாகப் பிரிவு, முறையான செயல்பாடின்றி கிடக்கின்றது. நிர்வாகப்பிரிவு வாரிய விதிகளுக்கு உட்பட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பது கிடையாது. தனிநபர் விண்ணப்பம், சங்கம் கொடுக்கின்ற கடிதங்கள் மீது தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு குறிப்பு எழுதி பிரிவுக்கு அனுப்பாமல் கொடுக்கும் விண்ணப்பங்களும், தொழிற்சங்க கடிதங்களும் சம்மந்தப்பட்ட பிரிவுக்கு செல்வது கிடையாது. பிரிவுக்கு சென்றாலும் அதன் மீது நடவடிக்கை ஏதும் இல்லாத கேவலமான நிலைமை நிர்வாகப் பிரிவில் கையாளப்படுகிறது. இதை முற்றிலும் மாற்றிஅமைத்து, கொடுக்கும் கடிதங்கள் விண்ணப்பங்கள் மீது நிர்வாகப்பிரிவு நடவடிக்கை எடுத்து விதிகளின் அடிப்படையில் எது சாத்தியமோ அதை செய்திட வேண்டும்.

மின்வாரிய தலைவர் அவர்களே, மேற்கூறிய கோரிக்கைகள் மீது பல கடிதங்கள் கொடுத்து நேர்காணலில் இக்கோரிக்கைகள், இக்கோரிக்கையின் தன்மை, இதனால் ஏற்படும் பாதிப்புகளை பலமுறை விளக்கிய பின்னரும், நிர்வாக தரப்பில் தகுந்த நடவடிக்கை இல்லாத காரணத்தால் வேறுவழியின்றி, கோரிக்கைகளின் மீது தீர்வுகாண தங்களது கவனத்தை ஈர்த்து தீர்வு காண விரும்பும் ஊழியர்களுக்கு வேறு வழியின்றி **22.12.2016 அன்று கூட்டு முறையீடும் - காத்திருக்கும் போராட்டத்தையும் நடத்திட உள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.**

இப்போராட்டத்தை மின்வாரியம் தவிர்க்க விரும்பினால் பேச்சுவார்த்தை நடத்தி இறுதி கட்டத்தில்உள்ள கோரிக்கைகளின் மீது உத்தரவு வழங்குவது. மீதமுள்ள கோரிக்கைகளின் மீது தொடர்ச்சியான பேச்சுவார்த்தை நடத்துவது என்பது தான் தீர்வாக அமையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களின் உண்மையுள்ள

**( S. இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

நகல்

இயக்குநர் / விநியோகம் - தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோக கழகம்

இயக்குநர்/உற்பத்தி - தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோக கழகம்

தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு - தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோக கழகம்

தொழிற்உறவு ஆலோசகர் - தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோக கழகம்